| அனுப்புநர்: | பெறுநர்: |
|---|---|
| திரு.சு.சிவராசு, இ.ஆ.ப.,<br>மாவட்ட ஆட்சித் தலைவர்,<br>திருச்சிராப்பள்ளி. | 1. முதல்வர்,<br>அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை,<br>திருச்சிராப்பள்ளி.<br>2. இணை இயக்குநர்,<br>மருத்துவப்பணிகள், திருச்சிராப்பள்ளி.<br>3. துணை இயக்குநர்,<br>சுகாதாரப்பணிகள், திருச்சிராப்பள்ளி.<br>4. ஆணையர்,<br>திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.<br>5. நகர் நல அலுவலர்,<br>திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.<br>6. உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்),<br>திருச்சிராப்பள்ளி.<br>7. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),<br>திருச்சிராப்பள்ளி. |

ந.க.ஜி6/8232/2020, நாள்: 16.06.2021.

அய்யா,

| | |
|---|---|
| பொருள்: | பேரிடர் மேலாண்மை - கோவிட்-19 - திருச்சிராப்பள்ளி மாவட்டம் - கொரோனா வைரஸ் நோய் பரவல் தடுப்பு நடவடிக்கைகள் - கொரோனா தொற்றினால் உயிரிழந்தோரை அடக்கம் செய்தல் - மோக்ஷா துவாரா டிரஸ்ட் என்ற அமைப்பு உயிரிழந்தோரை அடக்கம் செய்ய முன் வந்துள்ளது - தொடர்பாக. |
| பார்வை: | சம்மந்தப்பட்ட ஆவணங்கள் |

-------------

கொரோனா வைரஸ் பெருந்தொற்று பரவலிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் வண்ணம் தமிழக அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக கொரோனா தொற்றினால் உயிரிழந்தோரை அடக்கம் செய்ய இறந்த நபரின் சொந்த பகுதிக்கு இறந்தவரின் உடலை கொண்டு செல்வதில் அரசு இலவச அமரர் ஊர்திகள் ஈடுபட்டு வருகின்றன. அவ்வாறு இறந்தவரின் உடலை கொண்டு செல்வதில் அரசு இலவச அமரர் ஊர்திகள் கிடைக்கப்பெறாத நிலையில் அதிக பணத்தை செலவழிக்கும் நிலைக்கு பொதுமக்கள் ஆளாகின்றனர்.

மேற்படி சிரமங்களை தவிர்க்கும் பொருட்டும் பொதுமக்களுக்கு உதவும் பொருட்டும் சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் அரசு வழகாட்டுதல் நெறிமுறைகளின் படியும், விரைந்தும், சேவை மனப்பான்மையுடன் எவ்வித கட்டணமின்றி மோக்ஷா துவாரா டிரஸ்ட் (97898 88713, 97898 88714) என்ற தனியார் தொண்டு நிறுவனம் இறந்தவரின்

உடலை நல்லடக்கம் செய்வதற்காக சம்பந்தப்பட்ட மின்மயானத்திற்கோ/இடுகாட்டிற்கோ கொண்டு செல்வதற்காக தனது சொந்த செலவில் போக்குவரத்து வசதியினை செய்து வருகின்றது. மேற்கண்ட தொண்டு நிறுவனம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும் கொரோனா தொற்றினால் உயிரிழந்த ஏழை எளிய மக்களின் உடல்களை எவ்வித கட்டணமின்றி நல்லடக்கம் செய்யுமிடத்திற்கு தனது சொந்த பொறுப்பில் கொண்டு வரும் பணியினை செய்ய முன்வந்துள்ளது. எனவே திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அமைந்துள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள், நகர்புற சுகாதார நிலையங்கள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், கொரோனா சிறப்பு சிகிச்சை மையங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கொரோனா தொற்றினால் உயிரிழக்கும் நோயாளிகளின் உடல்களை அடக்கம் செய்யும் இடத்திற்கு எவ்வித கட்டணமும் இன்றி இலவசமாக கொண்டு செல்ல மேற்கண்ட மோக்ஷா துவாரா டிரஸ்ட் என்ற தனியார் தொண்டு நிறுவனத்தின் சேவையினை பயன்படுத்திக்கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒம்/(சு.சிவராசு)
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருச்சிராப்பள்ளி.

//உத்தரவுப்படி//

16/6/21

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
திருச்சிராப்பள்ளி.

நகல் :

1. சார் ஆட்சியர், ஸ்ரீரங்கம்/முசிறி.
2. வருவாய் கோட்டாட்சியர், திருச்சிராப்பள்ளி/இலால்குடி.
3. அனைத்து வட்டாட்சியர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
4. மோக்ஷா துவாரா டிரஸ்ட்,
   5/137பி, VS நகர், தங்கம் அவென்யூ அனக்ஸ்,
   சிக்கராயபுரம், கோவூர், EB,
   சென்னை-28.

16/06/2021